DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.585/2023**

Deposition of Witness

2024 ம் ஆண்டு ஜீன் மாதம் 26 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - பசுபதி | **PW-1** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

(எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டது.)

<u>முதல் விசாரணை:</u>-

நான் பவானியில் குடியிருந்து வருகிறேன். பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன மாதையன் என்னுடைய அப்பா. 24.02.2021 ம் தேதி என்னுடைய தங்கையின் திருமணத்திற்கு ஜவுளி எடுப்பதற்காக நானும், எனது அப்பாவும் TN 30 R 4307 என்ற பதிவு எண் கொண்ட Star city இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட, எனது அப்பா பின்னால் அமர்ந்து கொண்டு, சென்று ஜவுளி எடுத்து விட்டு மீண்டும் திரும்பி சென்ற போது லட்சுமி நகர் முன்பு கந்தசாமி மில் அருகில் என்னுடைய பின்புறத்தில் இருந்து TN 34 AZ 7329 என்ற TATA ACE வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்து என்னுடைய இருசக்கர வாகனத்தை முந்திச் சென்றார். அப்போது மேற்படி TATA ACE வாகனத்தின் இடதுபக்க பக்கவாட்டு கண்ணாடி என்னுடைய வலது கையில் இடத்தது, மேலும், மேற்படி வண்டியின் பின்புறக் கம்பி என்னுடைய இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. இருவரும் கீழே விழுந்துவிட்டோம். என்னுடைய அப்பாவிற்கு பின்னந்தலை, கால் முட்டி மற்றும் கை, இடது காதில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எனக்கு வலது கால் முட்டி, வலது கை முட்டி,

தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு போன் செய்து எங்கள் இருவரையும் பவானி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு முதலுதவி பெற்று அதன் பிறகு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டோம். பின் அங்கிருந்து என் அப்பாவை சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். ஞாயிற்றுக் கிழமை காலை சேலம் அரசு மருத்துவமனையில் என்னுடைய அப்பா இறந்துவிட்டார். விபத்து நடந்த அன்று இரவு ஈரோடு அரசு மருத்துவமனையில் வைத்து சித்தோடு காவல்நிலைய போலிசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த **புகார் அ.சாஆ. 1.** TATA ACE வாகனத்தை கோபால் என்பவர் ஓட்டி வந்தார். அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். (இன்று எதிரி ஆஜரில் இல்லை, மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது). போலிசார் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு விசாரணை:

விபத்து நடந்த இடத்திற்கு 100 மீ தொலைவில் லட்சுமி நகர் பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சுமார் கால் கி.மீ தொலைவு இருக்கும். சம்பவ இடம் போக்குவரத்து அதிகமாக இருக்கும் இடம் என்று சொன்னால் சரியல்ல. TATA ACE வாகனத்தின் இடது பக்கவாட்டு கண்ணாடியில் மோதி அதன் பிறகு அதன் பின்பக்க கம்பி இருசக்கர வாகனத்தில் மோதியதாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. கண்ணாடி மோதியிருந்தால் அப்போதே விழுந்திருப்பேன் என்றாலும் மீண்டும் பின்பக்க கம்பியில் மோத வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தான் TATA ACE வாகனத்தின் பின்பக்கமாக சென்று மோதிவிட்டேன் என்றாலும், TATA ACE வாகனம் மோதியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வலதுபக்கம் TATA ACE வாகனம் மோதியிருந்தால் நான் கீழே விழுந்து எனக்கு இடது பக்கம் தான் காயம் ஏற்பட்டிருக்கும், வலது பக்கம் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. நான் தான் அஜாக்கிரதையாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து TATA ACE இடது பக்கம் திரும்பும் போது அதை கவனிக்காமல் அதன் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.